ரெஜிஸ்டர் நெ. M. 3855.

பொதுக்கூட்டம் 31-3-42-ல் நடைபெறும்.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 4. மார்ச்சு, 1942 நெ. 12.

எடிடர்.

ஸ்ரீமான்.

வி. வியன்ன, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்
டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—

நம் பத்திரிகை ... ... ... 189

அங்கத்தினர் பொதுக்கூட்டத்தை கவனிக்கவும் .... 191

2. வெள்ளை பணவெல்லம் ... ... 192

3. கவர்ன்மெண்ட் உத்திரவு ஆகார பயிர் உற்பத்தி சகாயம் ... 193

4 வர்த்தமானங்களும் குறிப்புகளும் .... ... 193






கிராம பஞ்சாயத்து போர்டின்

கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 4 | மார்ச்சு, 1942. | No. 12 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப்பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக விஷயம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-க் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### நம் பத்திரிகை.

இந்த இதழுடன் நமது நாலாவது ஆண்டு பூர்த்தியாகிறது. இந்த நான்கு வருஷங்களாக, நாம் எந்த நோக்கத்துடன் பத்திரிகையை ஆரம்பித்தோமோ அந்த நோக்கத்தையே விடாமல் கைப்பிடித்து வந்தோம். சுதந்திர கிராமபஞ்சாயத்துகள் ஏற்படுத்தவேண்டும் என்ற லக்ஷியத்தை விடவில்லை. அதைத்தான் ஆதரித்து வந்தோம். வயது வந்தவர்களின் ஓட்டுரிமையை அடிப்படையாகக் கொண்ட கிராமபஞ்சாயத்துகள் எங்கும் கட்டாயமாக ஏற்படவேண்டும் என்று எப்போதும் வற்புறுத்தி வந்தோம். பஞ்சாயத்து அமைப்பு முறையில் ஒரு பாகமாக கூட்டுக் கமிட்டிகள் ஏற்படுத்தவேண்டும் என்று அடிக்கடி கேட்டு வந்தோம். கிராம ஊழியர்களை (Rural guide) பயிற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்தி அவர்கள் கூட்டுக் கமிட்டிகளின் ஆலோசனையாளர்களாக இருக்கவேண்டுமென்றும், தங்கள் உள்ளூர் பஞ்சாயத்துகளின் கிராம ஊழியர்களாகவும் இருக்க வேண்டுமென்றும், வற்புறுத்தி வந்தோம். பஞ்சாயத்துகளுக்கு வழிகளையும், சாதனங்களையும் ஏற்படுத்தும் திட்டத்தின் அவசியத்தை வற்புறுத்தி காட்டி வந்தோம்.

'இந்த வேலைகளைச் செய்தும், மேலதிகாரிகளின் கவனத்திற்கு பஞ்சாயத்துகளின் தினசரி குறைகளை எடுத்துக் காட்டினதும் அன்றி, நாம் கிராம

ஜனங்களுக்கு தேவையான பொது அறிவு வளர்ச்சி சம்பந்தமான அதாவது முறையாக விவசாயம், தேக ஆரோக்கியம் சுகாதாரம், கிராமகைத்தொழில் கல்வி, இன்னும் இந்த மாதிரி விஷயங்களைக் குறித்து இந்த பத்திரி கையில் கட்டுரைகள் எழுதி, ஜனங்களுக்கு சேவை செய்து வந்திருக் கிறோம். இந்த சேவையில் நமக்கு அந்த அந்த இலாக்காக்களின் தொடர்ந்த ஒத்துழைப்பை அடைந்து இருக்கிறோம். பல விஷயங்களைக் குறித்தும் அநேக விவரங்களை கொடுத்து பிரசுரிக்க உதவி செய்த விவசாய இலாகா டைரக்டர் அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். 'இன்டியன் பார்மிங்' (Indian Farming) 'இன்டியன் வர்த்தமானம்' (Indian Information) பத்திரிகைகளை இலவசமாக கொடுத்து உதவி செய்த இந்தியா கவர்மெண்டு விவசாய பிரசுர இலாக்காக்களுக்கு நாம் வந்தனம் செலுத்த வேண்டும்.

நமக்கு எந்த இடைஞ்சல்களுடன் உழைக்கவேண்டி யிருந்தது என் பதைப் பற்றி நாம் சொல்லத்தேவையில்லை. நம் சந்தா தொகை மிகவும் கொஞ்சம். வருட சந்தா ரூபாய் 2 ஆக வசூலிக்க வேண்டியிருந்தது. நான்கு வருஷங்களில், அநேக மாக மூன்று, சண்டை சமயமாக இருந் தன. காகிதம் இதர சாமான்களின் விலை அதிகமாக ஏறிவிட்டன. போதாத தற்கு, நூற்றுக் கணக்கான சுமார் 500 பஞ்சாயத்துகள் வருஷக்கணக்காக பத்திரிகையைத் தருவித்து விட்டு,சந்தா செலுத்த தவறி விட்டனர். வசூல் பாக்கியை ரத்து செய்ய வேண்டி வந்தது. தவறாமல் பத்திரிகையை வர வழைத்து, சந்தா செலுத்தி, பஞ்சாயத்து விஷயங்களிலும், பஞ்சாயத்து மசோதாக்களிலும் தங்கள் அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்து, எங்களுடன் ஒத்துழைத்து, இந்த பத்திரிகையின் சேவையின் அருமையையும் அது கிராம ஜனங்களுக்கு செய்யும் நன்மைகளையும் உணர்ந்து நடந்துக் கொண்ட பஞ்சாயத்துக்களுக்கு நாம் நன்றி செலுத்து கிறோம்.

இந்த நெருக்கடியான சமயத்திலும் நாம் சிக்கனமுறைகளை கையாண்டு எல்லா விஷயங்களையும் ஜாக்கிரதையாக கவனித்தும், நஷ்டமேற்படா மலும், துண்டு விழாமலும் சமாளித்து வந்தது சந்தோஷம் தரும் விஷயம். இன்னும் பக்கங்கள் அதிக மாக்கி இன்னும் பல விஷயங்களைக் குறித்து எழுத இயலாதது பற்றி வருந்துகிறோம் கிராம நன்மைக்குண்டான அநேக விஷயங்கள் நாம் தெரிவித்திருக்கிறபடி பத்திரிகையில்இடமில்லாத காரணத்தால், குறிப்பிட முடியாமல் போகின்றன. சந்தாவை மூன்று ரூபாயாக செய்வதற்கு அனுமதி கிடைத்த பின் பஞ்சாயத்துகளின் ஒத் துழைப்புடன் இன்னும் அதிக பக்கங்களும், அநேக விஷயங்களும் புகுத்த எண்ணுகிறோம்.

நான்காவது ஆண்டு முடிவில் பஞ்சாயத்துகளுக்கு நாம் மறுபடிசொல்ல விரும்புவது என்ன வென்றால் முக்கியமாக நல்ல சுறுசுறுப்பான பஞ்சா யத்துகளுக்கு—பரஸ்பரம் ஒத்துழைத்து, செழிப்பாக விருத்தியடைந்து,

பஞ்சாயத்து இயக்கத்தின் உபயோகத்தை மாகாணம் முழுவதும் பரவச் செய்யவேண்டும் என்பதே. தற்சமயம் எங்களை பாதிக்கும் விஷயமாக நாம் ஒவ்வொரு நண்பர்களையும் கேட்டுக்கொள்ளுவது என்ன வென்றால்; ஒவ்வொருவரும் எங்களுக்காக முயற்சி செய்து அக்கம் பக்கமிருக்கும் நண்பர்களை சந்தாதார்களாகச் சேரும்படி தூண்டி நன்மை அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். வரும் வருஷத்தில் பத்திரிகை விஷயமாகவும், பொதுவாக பஞ்சாயத்து இயக்க விஷயமாகவும் நாம் இன்னும் முன்னேற்றம் அடைவோம் என்று நம்புகிறோம். சந்தாதார்கள் அனைவருக்கும் நாம் நல்வாழ்த்து கூறுகிறோம்.

---

## அங்கத்தினர் பொதுக்கூட்டத்தை கவனிக்கவும்.

பஞ்சாயத்து மசோதாவை ஆலோசிக்க கவர்மெண்டு ஒரு கமிடி ஏற்படுத்தி, நம் மாகாணத்து பஞ்சாயத்து சங்கத்திற்கு அதில் 4-இல் 1-பங்கு பிரதிநிதித்துவம் அளித்திருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு சுதந்திர அதிகாரம் தேவை என்று நம் கக்ஷியை வாதாட; உங்கள் பிரதிநிதிக்கு உங்களுடைய தீர்மானமான அபிப்பிராயமும் ஆதரவும் தேவை. அதுகாரணமாக நடக்கப் போகும், மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் பொதுக் கூட்டம்—மகாநாடு—மிகவும் முக்கியமானது.

கூட்டம் இந்த மாதம் 29-ம் தேதியல்ல, ஆனால் 31-ம் தேதி என்பதை கவனிக்கவும். உங்கள்பிரதிநிதிகளின் பெயரை சீக்கிரம் எங்கள் ஆபீசுக்கு அனுப்பி, அவர்கள் கூட்டத்திற்கு தவறாமல் வரும்படி செய்யவும்; கவர்மெண்டார் இந்த செலவு தொகையை அனுமதிக்கவில்லை என்ற காரணத்தினால் அஞ்சி நின்று விடவேண்டாம். சண்டையைப்பற்றி உலாவி வரும் ஆதாரமற்ற செய்திகளுக்காகவும் அஞ்சவேண்டாம். செலவையாவது அசௌகரியத்தையாவதும் பொருட் படுத்தக்கூடாது. கவர்மெண்டார் நியமித்திருக்கும் கமிடியானது தீர்மானிக்கவேண்டியது மிகவும் முக்கியமான விஷயம். உங்களுடைய செலவையும் அசௌகரியத்தையும் பாராட்டாமல் கூட்டத்திற்கு ஆஜராக வேண்டியது உங்கள் கடமை. அங்கு உங்களுடைய ஆலோசனைகள் மூலம் உங்களுடைய பிரதிநிதிகளுக்கும், கவர்மெண்டாருக்கும் சகாயம் செய்யவேண்டும். தயவு செய்து இதைக் கவனிக்கவும்.

---

# வெள்ளை பனைவெல்லம்

(கிராம உத்தியோக பத்திரிகை.)

பனை வெல்லம் ஆழ்ந்த பழுப்பு நிறமுள்ளது. இதற்கு காரணம் என்ன வென்றால், பனச்சாறு பானைக்குள் இறங்கி புளித்துப் போகாமல் தடுப்பதற்காக, உட்புறத்தில் சுண்ணும்பு பூசப்படுகிறது. அது அந்த சாறை காரம் (alkaline) சம்பந்தமானதாக மாற்றுகிறது எல்லா காரம் (alkali) சம்பந்தமான வஸ்துக் களும் சர்க்கரை சேர்ந்த திராவகத்துடன் காய்ச்சப் பட்டால், ஒருவித ஆழ்ந்த பழுப்பு நிறம் ஏற்படுகிறது.

ஆதிகாலம் தொட்டு, சாறு புளிக்காமலிருக்க நம் தேசத்தில் சுண்ணும்பு உபயோகப்படுத்தப்படுகிறது. ஏனென்றால் புளித்த சாரிலிருந்து வெல்லம் எடுக்கமுடியாது. இது வரையில் எவ்வித ஆராய்ச்சி செய்தும், சுண்ணும்பைப் போல மலிவானதும், சிறப்பானதுமான வஸ்து கண்டு பிடிக்கப்பட வில்லை.

ஆதலால் பனவெல்லத்தின் நிறத்தை மாற்ற சாரில் சுண்ணும்பினுல் ஏற்படும் குணத்தை எப்படி குறைப்பது அல்லது அகற்றுவது என்பது தான் ஒரே வழி. தடவப்படும் சுண்ணும்பை குறைப்பது கூடாது. ஏனெனில் அப்போது சாறு புளிப்பெடுத்தும் வெல்லம் செய்ய பிரயோஜனமற்று போகும். எவ்வளவு அளவு சுண்ணும்பு தான் தடவவேண்டும் என்பதையும் நிர்ணயிக்க முடியாது. ஏனெனில் சாரின் அளவு தினந்தோறும் மாறும். ஆகையால் கொஞ்சம் சுண்ணும்பு உப யோகிப்பதை விட அதிக அளவு உபயோகிப்பதே உசிதம்.

இப்படி உபயோகப்படும் சுண்ணும்பு, சாரில் இரண்டு உருவத்திலிருக்கிறது. (1) கொஞ்சம் கரைந்தும் (2) கொஞ்சம் கரையாமலு மிருக்கிறது. கரையாமல் தென்படும் சுண்ணும்பு சாரை காய்ச்சி தெளியவைத்துக் கொட்டினுல் அது நீங்கி விடும். ஆனுல் கரைந்த சுண்ணும்பைப் பற்றிதான் கஷ்டம் அதிகம். அது சாரை காரமாக (alkaline) மாற்றுகிறது. இக்க மாறுதலை கொஞ்சம் திராவகபதார்த்தம் சாருடன் சேர்த்து தான் திருப்ப வேண்டும், அநேக வகைகள் ஆராய்ச்சி செய்யப் பட்டன. அ—து. கந்தகத் திராவகம். (Sulphuric Acid), உப்பூல திராவகம் (Hydro-chloric Acid), ஸைடிரிக் ஆசிட் (citric Acid) முதலியன. எல்லா வற்றையும் விட மேன்மையானது சூபர் பாஸ்பேட் (Super-Phosphate) என்பது தான். அது சாதாரணமாக செழிக்க வைக்கும் எருவாக உபயோகப்படுத்தப்படு கிறது. அது மிகவும் மலிவானது. சாரின் காரத்தைப் போக்க கொஞ்சம் தான் தேவை. அதை உபயோகப்படுத்தும் வழி வருமாறு.

சாரை மரத்திலிருந்து எடுத்ததும், அது காய்ச்சப்படுகிறது. கொதிக்கப்படுவ தில்லை. சூடான சாரில் கொஞ்சமாக சூபர் பாஸ்பேட் (Super-Phospate) திராவகம், லிட்மஸ் காகிதம் (Litmus) என்னும் ஒருவித ரசாயன காகிதமானது அதில் தோய்க்கப்பட்டால் சிவப்பு நிறத்திலிருந்து இலேசான நீலநிறமாக மாறும் படி, சேர்க்கப்படுகிறது. சூபர் பாஸ்பேட் என்பதை சேர்ப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதிகமாக சேர்த்தால் வெல்லம் புளித்தும், பிசுக்கு மாதிரி ஆகிவிடும். ஆகையால் பாகை கொஞ்சம் காரத்துடன் இருக்கும்படி விடுவதே நல்லது. இந்த சாரை பின் கொதிவரும் வரையில் வைத்து, அரைமணி நேரம் அப்படியே வைத்து, பிறகு அதை தெளிய வைத்து, அடியில் தங்கியிருக்கும் வண் டலை தூர எறிந்து, சாரை வெல்லமாக காய்ச்சினுல், நீர் இலேசாக இருக்கும்.

'சூபர் பாஸ் பேட்' என்பது இருவகைப்படும். (1) உலோக சம்பந்தமானது, (2) இயற்கை வஸ்துக்களின் சேர்க்கை சம்பந்தப்பட்டது. உலோக சம்பந்தமானது தான் சிலாக்கியம். அது எருவு சாமான் விற்பவர்களிடமும், விவசாய கருவிகள் விற்பவர்களிடமும் கிடைக்கும். சிகப்பு 'லிட்மஸ்' (Litmus) காகிதம் மருந்து வியாபாரிகளிடம் கிடைக்கும்.

இந்த வகையால் அதிக செலவு ஏற்படுவது 1 பவுண்டு வெல்லத்திற்கு 1½ தம்பிடி. எல்லா ரகத்திற்கும் ஏற்றது.

# கவர்ன்மெண்ட் உத்திரவு ஆகாரபயிர் உற்பத்தி சகாயம்.

நெல் பயிர் முதலிய ஆகார பயிர்கள் உற்பத்தி விருத்தி விஷயமாய் இந்த பசலி முதல் 3 வருஷங்களுக்கு காண்பிக்கப்படும் சலுகைகளைக் குறித்து கவர்மெண்டார் பின்கண்ட ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்,

(1) 1351, 1352, 1353 பசலிகளில் தீர்வை விதித்துள்ள பயிர்செய்யக் கூடிய ஆனால் பயிர் செய்யப்படாத நிலங்களில் நெல் உள்பட எல்லா ஆகார பயிர்களும் பயிர் செய்யலாம். தீர்வை விதிக்கப்படமாட்டாது. அதே போல் 1349 அல்லது 1350 பசலிகளில் பயிர் செய்ப்படாததும், தீர்வை விதிக்கப் படாததுமான நிலங்களையும் டை பயிர் செய்ய உபயோகப்படுத்தலாம். ஆனால் தற்கால விதிகளின்படி பாய்சலுக்கு ஜலம் எடுக்க முன்னதாக அனுமதி கேழ்கும் படி இருக்கும் நிலங்களில் அதேபோல் அனுமதி பெறவேண்டும்.

இந்த சலுகை தஞ்சை ஜில்லா காவேரி மேட்டூர் பாய்சல் திட்டமுள்ள நிலங்களுக்கு செல்லுபடியாகாது. மேலும் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் கவர்மெண்டார் ரெவினியூ இலாகா அறிக்கை நெ. 19 தேதி 21-1-1942 பிரகாரம் சமீபத்தில் சலுகைகள் காட்டப்பட காவேரி பாய்சல் நிலங்களுக்கும் செல்லுபடியாகாது.

(2) 1351, 1352, 1353 பசலிகளில் வீட்டு புழக்கடைத் தோட்டங்களில் 25 செண்டு வரையில் புஞ்சை ஆகார பயிர்கள் தீர்வையன்னியில் பயிர் செய்யலாம்.

(3) ஜலம் போதாத பக்ஷத்தில், குடிகளுக்கு நஞ்சை நிலங்களில் புஞ்சை ஆகார பயிர்கள் உற்பத்தி செய்ய எல்லாவித சௌகரியங்களும் சகாயமும் செய்து கொடுக்கப்படும்.

# வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

## பருத்தி பயிர் செய்வோருக்கு உதவி.

ஜப்பானுடன் வியாபார சம்பந்தம் அறந்து போனதினால் ஏற்பட்ட நிலைமையை சமாளிக்க இந்தியா கவர்மெண்டார் சமீபத்தில் பருத்தி பயிர் செய்பவர் சகாயத்திற்கு ஒரு தனி நிதியை ஏற்படுத்த நிச்சயித்திருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்

உடனே செய்யவேண்டியிருக்கும் வேலைகள் தவிற—அ-து. சமயத்திற்கு தக்கபடி சம் பிரதேசங்களில் உபயோகப்படுத்தப்படும் பருத்திகளை வாங்கி மார்க்கெட்டின் போக்கை கவனித்து ஏற்பாடுகள் செய்வதல்லாமல், வருங்கால நிலைமை சிரமடைய அந்த அந்த மாகாண கவர்மெண்டுக்கும், சமஸ்தானங்களுக்கும் தகுந்த பண உதவி செய்து பருத்தி பயிர் செய்பவர்களை சின்ன ஸ்டேபிள் பருத்திக்குப் பதிலாக நீள ஸ்டேபிள் பருத்தியோ, அல்லது முற்றிலும் வேறு பயிரோ—முக்கியமாக, ஆகார பயிர்—செய்ய உதவி செய்யப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

## வாள்மீன் எண்ணெ (Shark Oil)

சின்ன குழந்தைகளுக்கு முக்கியமாக நோவாய்ப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு ஆங்கில வைத்தியர்கள் நம் தேசத்தில் மீன் எண்ணெயை கொடுப்பது வழக்கமாக இருக்கிறது. அது வெளி தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டும், யுத்த காரணமாக இந்த இறக்குமதி தடைப்பட்டிருக்கிறது. நம் தேசத்தில் இதற்கு பதில் வேறு ஒரு மருந்து கண்டுபிடிக்க அநேக முயற்சிகள் செய்யப்பட்டன. வாள் மீன் எண்ணெ (Shark Oil) யானது மீன் எண்ணெயை விட நல்லதாக காணப்பட்டது. கவர்மெண்டார் இந்த எண்ணெயை தயார்செய்ய ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார்கள். அதற்காக கட்டடம் கட்ட 14,000 ரூபாயும் யந்திரங்கள் ஸ்தாபிக்க 26,000 ரூபாயும், செலவுசெய்ய தொகையையும் அனுமதித்திருக்கிறார்கள்.

∴

## கைத்தறி நெசவு தொழிலாளருக்கு

கைத்தறி நெசவு தொழில் நிலமையை பற்றி தெரிவிக்க, டாக்டர் தாமஸ் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட விவர சேகரிப்பு கமிட்டியானது தனது யாதாஸ்தை இந்தியா கவர்மெண்டுக்கு சமர்ப்பித்து விட்டதாகத் தெரிகிறது. நூல் விலை மிகவும் அதிகமாக ஏறி விட்டதால் நெசவு தொழிளாலர்களின் நிலமை மிகவும் மோசமாகிவிட்டது இந்த நிலமைக்குக் காரணம் இந்த தொழிலில் இருந்த தரகர்கள்தான். இந்தியா கவர்மெண்டு இங்கிலாந்தைத் தவிர வெளி நாடுகளுக்கு அனுப்பும் நூல் ஏற்றுமதியை கட்டுப்படுத்த ஆரம்பித்திருக்கிறது. ஜப்பான் யுத்தத்திலிரங்கிய பின் வெளி தேசங்களில் இந்திய நூலுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் வியாபாரிகள் தென்னாப்பிரிக்கா ஜாவா போன்ற வெளி நாடுகளுக்கு நூல் ஏற்றுமதி செய்வது மிக்க லாபகரமானது என்று கண்டார்கள். இந்த நிலமை கை நெசவு தொழிலாளர்களை மிகவும் பாதித்து இருக்கிறது. அவர்களால் மில்களுடன் போட்டி யிட முடியவில்லை.

கவர்மெண்டார் நூல் ஏற்றுமதியை சண்டை ஆரம்பிக்குமுன் மூன்று வருஷத்தில் சராசரி அளவை வைத்துக்கொண்டு கட்டுப்படுத்துவது அவசியம் என்ற முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. இது இந்த வாரத்தின் விலையை பாதித்திருக்கிறது. மேலும் கைத்தறி நெசவு தொழிலாளர்களின் நிலமையை முக்கியமாய் சீர் படுத்த கமிட்டியின் யாதாஸ்துபடி உற்பத்தியாகும் எல்லா நூலும் கை கைத்தறி நெசவு தொழிலாலருக்கே தேவையாக இருக்கும் என்று ஏற்படும் பக்ஷத்தில், நூலின் ஏற்றுமதியை கட்டு படுத்த இன்னும் கடினமான முறைகள் அனுஷ்டிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படியும் உற்பத்தி குறைவாக இருந்தால், கைத்தறி நெசவுத் தொழிலுக்குத் தேவையான அதிக நூலை உற்பத்தி செய்யும்படி இந்திய மில்கள் வற்புறுத்தப்படும். தேச தேவைக்கு மேலிருக்கும் நூல்தான் ஏற்றுமதி செய்ய அனுமதி செய்ய அனுமதிக்கப்படும்.

∴ ∴ ∴

## பஞ்சாபில் கடன் பளுவு குறைத்தல்.

பஞ்சாப் கடன் சமரஸ போர்டானது 35,—39, வருஷங்களில் 20, 426, 508 ரூபாய் மொத்த கடன்களை 86, 77,351 ரூபாய்க்கு குறைத்திருக்கிறது.

விவசாயிகளின் கடன்களை நயஞ்சொல்லி சமரசம் செய்யும்படி போர்டுக்கு தெரிவிக்கப்பட்டது. முதலில் கடன் கொடுத்தவர்கள் சமரசப் போர்டுக்குப்

போக நயம்பெறுர்கள். ஆனால் சீக்கிரத்தில் அவைகளின் நன்மைகளை யறிந்து ரொம்பவும் உபயோகப்படுத்த தலைப்பட்டார்கள். சமரசம் செய்யப்பட்ட துகையில் 5, 63, 673 ரூபாய் உடனே ரொக்கமாகவோ நிலுசாகவோ செலுத்தப்பட்டது. பாக்கி துகைத் தவணையாக கொடுக்க ஏற்பாடு ஆயிற்று. அநேக கேசுகளில் ரொம்பவும் சலுகை காட்டப்பட்டது. போரூறடாக என்னும் ஊரில் ஒரு விவகாரத்தில் 1000 கடன் 50 ரூபாய்க்கு சமரசம் செய்து குறைக்கப்பட்டது.

∴ ∴ ∴

## நீல அடமான பாக்கி சேருக்கும் கடன்கள்.

பாக்கி கடன் துகை விளியோகித்திருப்பதைப்பற்றி மிகவும் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், ஷை துகைகள் 2, 3 பிரதேசங்களில் மிக்க அதிகமாக கொடுக்கப்பட்டிருப்பதே. உதாரணமாக, 1940-41ல் கொடுக்கப்பட்ட துகை 40 லக்ஷத்தில் 17 லக்ஷம் சர்க்கார் பிரதேசத்திற்கும், 8 லக்ஷம் கோயம்பத்தூர், சேலம், திருச்சிறுப்பள்ளி, நீலகிரி ஜில்லாக்களுக்கும், 7 லக்ஷம் தஞ்சாவூர் மற்ற தென் தமிழ் ஜில்லாக்களுக்கும், 5 லக்ஷம் செங்கற்பட்டு, வட, தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கும், ராயலசீமா ஜில்லாக்களுக்கு 3 லக்ஷமும், மேற்கு ஜில்லாக்களுக்கு ஒரே லக்ஷமும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி ஆரம்பித்ததிலிருந்து இந்த மாதிரிதான் நடந்துவருவதாகத் தெரிகிறது.

∴ ∴ ∴

## சமூக சேவா சங்கம்: கிராம சுகாதாரத்திற்கு திரவிய சகாயம்.

பம்பாயிலுள்ள சமூக சேவா சங்கமானது 'மிஸ் ப்ளாரன்ஸ் நைடிங்கேல் கிராம சுகாதார நிதி' ('Miss. Fiorence Nitinghale Village Sanitation Fund') என்னும் நிதியை நடத்தி வருகிறது. இந்த நிதியின் வட்டித் துகையிலிருந்து வருஷத்திற்கு ரூபாய் 150 வரையில், கிராம சுகாதாரத்தை சீர்படுத்தவும், கவனிக்கவும், கொடுக்கப்படுகிறது. திரவிய லாபம் வேண்டும் என்கிற ஷை சுகாதார வேலையில் ஈடுபட்டிருக்கும் ஜில்லா அல்லது தாலுக்கா சுகாதார சங்கங்கள் ஐக்கிய சங்கங்கள் அல்லது இதர ஸ்தாபனங்கள் 28-2-1942க்குள் காரியதரிசி, சமூக சேவா சங்கம். பம்பாய் 4 என்ற விலாசத்திற்கு எழுதவும்.

* • *

## திருவத்தியூர் பசு மாடு மார்க்கெட்.

மேற்கொண்டு புது மாடுகள் வரவாவது, விற்பனையாவது அநேகமாக இந்த வாரம் இல்லை. முன்கொண்டு வரப்பட்ட அநேக பிராணிகள் வளர்ப்பு பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டன. விலைவாசி ரொம்ப மட்டமாக இருந்தது.

* • *

## கிராம சீர்திருத்தத்திற்காக 15 லக்ஷ ரூபாய் செலவு.

கிராம அபிவிருத்தியைக் குறித்து சென்னை கவர்மெண்டாரால் விடப்பட்ட அறிக்கை தெரிவிப்பதாவது 1941 வருஷம் டிசம்பர் மாதம் 31ம் தேதியோடு முடிவடைந்த கால் வருஷத்தில் கிராம அபிவிருத்திக்காக இந்தியா கவர்மெண்டு உதவி தொகையிலிருந்தும், இதர உள்ளூர் உதவி பணத்திலிருந்தும் 1,00,779 ரூபாய் செலவழிக்கப்பட்டது. அந்த கால் வருஷ முடிவோடு செய்த மொத்த செலவு15,15, 689 ரூபாய்.

இந்த கால் வருஷத்தில் 2 குளங்களும், 63 கிணறுகளும் வெட்டப்பட்டன; 10 கிணறுகள் சீர்திருத்தப்பட்டன. 354 கிணறுகள் வெட்டி பூர்த்தியாகாமலிருக்கின்றன. 136 கிணறுகளுக்கும், 4 ஏரிகளுக்கும் ரிப்பேர்கள் ஆகிக் கொண்டிருக்கின்றன. 9 ரஸ்தாக்கள் போடப்பட்டன. 6 சீர்திருத்தப்பட்டன. ஒரு வாராவதிக் கட்டப்பட்டது. 115 புதிய ரஸ்தாக்களும், 37 வாராவதிகளும் 26 பாலங்களும் செய்யப்பட்டு வருகின்றன. 38 ரஸ்தாக்களின் ரிப்பேர்கள் செய்யப்பட்டு வருகின்றன. கடன் விற்பனை சங்கங்களின் கடங்கு கட்ட அனுமதிக்கப்

பட்டு 77 கடங்குகளில் 5 பூர்த்தியாகிவிட்டன. 29 கடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

**கால் நடைகளின் தொத்து வியாதி.**

1941 வருஷம் டிசம்பர் மாதத்தைவிட '42 ஜனவரியில் கால் நடைகளின் தொத்து வியாதிகளில் கொஞ்சம் அதிகமும், ஆனல் இறந்தது கொஞ்சம் குறைவாகவும் இருந்தது.

'ரிண்டர்பெஸ்ட்' என்ற வியாதியினுல் பிடிக்கப்பட்டு இறந்துபோன பிராணிகளின் தொகை சென்ற மாதத்தைவிட குறைவு. 1941 டிசம்பரில் 137 தடவை வியாதி வந்து சேதமான பிராணிகளின் எண்ணிக்கை 933, ஜனவரியில் 110ம் 795ம் தான்.

**ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள்.**

6 மாத காலம் ஒத்திப்போட கவர்மெண்டார் ஏற்பாடு.

31—3—1942 தேதி நடக்கவேண்டிய தேர்தல்களை தற்சமய நிலைமையை உத்தேசித்து 6 மாதம் தள்ளிவைக்க கவர்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

தற்போது ஸ்தல ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களின் காலத்தை நீடிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**சிப்பாய்களுக்கு துணி சப்ளை: சென்னை யுத்த சப்ளைக்கு உத்திரவு.**

சென்னை கவர்மெண்டுக்கும் மாகாண கைத்தறி நெசவாளர் ஐக்கிய சங்கத்திற்கும் யுத்த சப்ளை இலாகாவிலிருந்து அதிக துணி சப்ளை செய்யும்படி உத்திரவு கிடைத்திருக்கிறது.

ஷை சப்ளை செய்ய உதவியாக சங்கத்திற்கு

(1) 4,00,000 ரூபாய் நூல் வாங்கவும்

(2) 1,00,000 ரூபாய் சம்பளம் கொடுக்கவும்

(3) 10,000 ரூபாய் மூலதன உதவியாகவும்

சன்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை சப்ளை விஷயமாக எந்த எந்த பிரதேசத்தில் நெசவு தொழிலாளர்கள் அதிக கஷ்டப்படுகிறார்களோ அந்த அந்த இடங்களில் வேலை கொடுக்கும்படி உத்தரவாகி யிருக்கிறது. முக்கியமாக பஞ்ச நிவாரண வேலை ஏதாவது நடக்கும் இடங்களில் உதவி செய்ய ஏற்பாடு ஆகியிருக்கிறது.

* * *

**கிராமங்களில் ஜல சப்ளை. டி. ஆஸ்டின் துரையின் விளக்கம்.**

"இந்த மாகாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பந்தோபஸ்து செய்யப்பட்ட தண்ணீர் வசதியளிக்கும்படி செய்ய கவர்மெண்டாரின் எண்ணம். முக்கியமாக பண நெருக்கடி காரணத்தினுல் இந்த நோக்கம் பல வருஷங்கள் பூர்த்தியாகாமலிருக்கலாம். ஆயினும், தனிப்பட்ட மனிதர்களும், ஸ்தாபனங்களும், தர்மசிந்தையுள்ளவர்களும், இந்த விஷயத்தில் இவ்விடத்தில் நடந்ததைப்போல் சகாயம் செய்ய முன் வருவார்கள் என்று நம்பப்படுகிறது. கவர்மெண்டார் 10 லக்ஷம் தண்ணீர் வசதிக்காக அளித்து, ரெவின்யூ போர்டுக்கும், கலக்டர்களுக்கும் அந்த தொகையை தாராளமாக செலவு செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், போர்டுகளுக்கும் தண்ணீர் வசதி திட்டங்கள் ஏற்படுத்த உண்டாகும் செலவுக்கு கவர்மெண்டார் பண உதவி செய்கிறார்கள்" என்று திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த மாட்டுச் சந்தை மைதானத்தில் கிணற்றையும், பம்பு சாலையையும் திறந்துவைக்கும்போது கவர்னரின் ஆலோசனையாளரான டி. ஆஸ்டின் துரை அவர்கள் சொன்னார்.

---

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் ப்ராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் ப்ராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர். போன் நெ. 8510.

சைதாப்பேட்டை ப்ராஞ்சு:

38, காரணீஸ்வரர் கோவில் தெரு, சைதாப்பேட்டை.

ப்ரசிடெண்டு:

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.

ஸெக்ரடேரி:

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருந்து விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திர யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைகளுக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
ப்ராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா: மிஸ்டர் வி. அப்பன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 117ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதாரர்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.